# கருணை - KARUNAI

## தமிழ் - ENGLISH

திருவள்ளுவர் ஆண்டு 2047
1st January 2016
வருட சந்தா ரூ. 50 மட்டும்

*கடவுள் நம்பிக்கை,
ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை இதழ்*
***Volume : 6 Issue : 3***

**உரிமை மற்றும் பதிப்பாளர்:**

திருமதி.
இராமலெட்சுமி
இளங்கோ,M.A.,
செல் : 9487683114

**ஆசிரியர்:**

திரு.A.G.சந்திரமோகன்.
செல் : 9442038770

**உதவி குழு:-**

திரு.G.சுப்பிரமணியன்
செல் : 9842818242
திரு H. தாயுமானவர், B.L.,
உயர்திரு. M. கண்ணன்
உயர்திரு. C. ஆறுமுகம்

**கௌரவ ஆலோசகர்:**

தயவு.திரு.P.சுப்பாராஜ்,M.A. B.L.
செல் : 9443794751

**Place of Publication**
Karunai Sabai Salai Trust,
Grace Hall
34, Poombukar Nagar,
North Extn. Uthangudi,
Madurai-625 107.

**அன்புடையீர்! வணக்கம்.**

2016 தைப்பூசப் பெருவிழாவை சிறப்பாக நடத்திய வடலூர் திருஅருட்பிரகாச வள்ளலாரின் தெய்வநிலைய நிர்வாகிகள், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையாளர்கள் ஆகிய அனைவருக்கும் நமது பாராட்டுதலும், நன்றிகளும்.

சுட்டிக்காட்டிய பலமுரண்பாடான செயல்களை நிர்வாகத்தினர் தடுத்துள்ளனர். விபூதி கொடுத்தல், சூடம், நெய் விளக்குகள் ஏற்றுவதை நிலைய நிர்வாகம் கண்டுகொள்ளாமல் இருந்தது ஏன் என்று தெரியவில்லை. வரும் காலங்களில் இவை தடுக்கப்படும் என நம்புகிறோம்.

வள்ளலார் மார்க்கத்தில் எந்தொரு ஆசாரமும் இல்லை கூடாது என்பதே உள்ளது.

**இப்படிக்கு**
இதழ்குழு

# சுத்த சன்மார்க்கம் ஒன்றே இனி எல்லா உலகத்துக்கும் வழங்கும்

- ஏ.பி.ஜெ. அருள் -

ஆம், அன்பர்களே !

வள்ளலார் கண்ட உண்மை பொதுநெறி ''சுத்த சன்மார்க்கம்'' ஒன்றே இனி எல்லா உலகத்தும் வழங்கும். எந்தொரு நாடானாலும் எந்தொரு நாட்டு மக்களானாலும் இன்று உண்மை எது? என்றே விசாரிக்க ஆரம்பித்துவிட்டனர்.

எவ்வகை பொருளாதார உடன்பாடுகள், அமைதி பேச்சுகள் நாடுகளுக்கிடையே பலவருடங்களாக ஏற்பட்டிருந்தாலும் தீவிரவாதங்கள், விரோதங்கள், பகைகள் குறைந்தபாடில்லை. அதில் முழு வெற்றியடையாது போனதே உண்மையாகும்.

உலகத்தார்களை பிரிக்கும் காரணிகள் எவை? எனத் தலைவர்கள் யோசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். உலகத்தார்களை பிரிப்பது இன, சமய, மதங்களே. இன வேறபாட்டிற்கு அடிப்படையாக உள்ளது சமய, மதங்களே !

சமய மதங்களின் உண்மை என்ன? என அறிஞர்கள் யோசிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

ஒவ்வொரு சமய மதங்களின் கோட்பாடுகள், அதனதன் கடவுளர், தேவர், ஞானிகள், தலைவர்கள் திறம் குறித்து இன்று விசாரிக்க வைத்துள்ளது.

இயற்கை (அண்ட பிண்ட) உண்மையின் மிகச்சிறியளவையே விஞ்ஞான அறிவால் அறிந்துள்ளோம். ஆனால் அந்த இயற்கையின் முழு சொரூப வடிவத்தை (கடவுளை) எங்ஙனம் முடிபாக நம் சமய மத மார்க்கத்தில் கண்டு வணங்குகிறோம்? எப்படி இது சரியாகும்? என்ற விசாரணை அறிவு படைத்தோரை நெருங்கியுள்ளது.

நம் முன்னோர்கள் அவர்களுக்கு வெளிப்பட்டிருந்த அறிவு அளவிலேயே நமக்கு நல்லெண்ண அடிப்படையில் வெளிப்படுத்தி வரையறுத்து கொடுத்துள்ளார்கள். ஆனால் இன்று நம் ஆன்மாக்களில் ஏற்பட்ட நல்ல விசாரணையில் "உண்மை கடவுள் நிலை'' குறித்து அறிய ஆசை ஏற்பட்டுள்ளது.

நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள கடவுள் தேவர்களை கடந்து ''உண்மை கடவுளை'' காண முற்பட்டுள்ளோம். மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள, பொதுவாக உள்ள இயக்கங்களில், இந்த உண்மை கடவுளையே குறிப்பிடுகிறார்கள்.

- ❖ பொது மையங்கள்
- ❖ விசாரணைக் கூடங்கள்
- ❖ சமூக சேவை மையங்களில்

''உண்மை பொது கடவுளை''யே குறிப்பிடுகிறார்கள்.

வள்ளலாரின் சுத்த சன்மார்க்கத்தில் வெளிப்பட்டுள்ள கடவுளே ''உண்மை கடவுள்''. அதன் நெறியே ''உண்மை பொது நெறி''. இது ஏதோ, எல்லா மார்க்கத்திலும் சொல்லப் படுகின்ற வார்த்தை போல் இதை கருதிவிடாதீர்கள். வள்ளலார் அவர்கள் இருந்த, இருக்கின்ற இருக்கப் போகின்ற உண்மையை தான் கண்டு வெளிப்படுத்தி உள்ளார்கள்.

தான் கண்டது போல் நம்மையும் காணச்சொல்கிறார்கள். ஒவ்வொருவரும் அவரவர் அக அனுபவத்தில் இந்த உண்மையை காணச் சொல்கிறார் என்றால் எங்ஙனம் பொய் மொழியாகும்?

- ❖ உண்மை அறிவால்
- ❖ உண்மை அன்பால்
- ❖ உண்மை இரக்கத்தால், மட்டுமே

உண்மை கடவுள் நிலைக்காணச் சொல்லும் சுத்த சன்மார்க்கம் ஒன்றே இனி எல்லா உலகத்துக்கும் வழங்கும்

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**

**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

**24.1.2016 - 145வது தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழா வடலூர் தருமச்சாலை மேடையில் ஏ.பி.ஜெ. அருள் ஆற்றிய ளசொற்பொழிவு விபரம்**

**வணக்கம்**

திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் தைப்பூச நன்னாளில் சிறப்புரையாற்ற வாய்ப்பு நல்கிய உயர்திரு ஆணையாளர்கள் மற்றும் தெய்வ நிலைய செயல் அலுவலர் மற்றும் மேதகு தமிழக அரசின் கருணைக்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு கூடியிருக்கும் நம்மவர்கள் மற்றும் அனைவரையும் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் தெய்வநிலையம் சிறப்பாக நடைபெற்று வருவதற்கு மேதகு தமிழக அரசுக்கும், பார்வதிபுர மக்களுக்கும், எனது மற்றும் அனைவரின் சார்பாகவும் நன்றியை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

எனக்கு கொடுக்கப்பட்ட தலைப்பு, "வள்ளலாரின் சுத்த சன்மார்க்க நெறியானது ஒரு தனிநெறி ஆகும்" என்பதே.

திருவருட்பிரகாச வள்ளலார் சுத்த சன்மார்க்கப் பயனாகிய மரணமில்லா பெருவாழ்வு பெற்றார்கள். சாகா நிலை பெற்றார்கள். தனி ஒளி வடிவம் பெற்றார்கள். இது உண்மை மற்றும் நம் நம்பிக்கை.

**நிற்க!**

வள்ளலார் சாகவில்லை என்றால்

இப்பொழுது எங்கே? இங்கு அவர் எங்கே?

இப்படி மற்றவர்கள் கேட்டால் நம் பதில் என்ன?

**அன்பர்களே!**

**நம்புங்கள் உறுதியாக நம்புங்கள்**

**சாகாகல்வி கைகூடும் என்று நம்புங்கள்.**

**வள்ளலற் பெருமான் எங்கும்,**

**இதோ இங்கும் உள்ளார்கள்.**

**பெருமானை பார்க்க முடியுமா? ஏன் பார்க்க முடியாது**

**அவரிடம் பேச முடியுமா? ஏன் பேச முடியாது**

**வள்ளலார் எங்கு உள்ளார்கள்?**

**எப்படி பேசுவது?**

**அன்பர்களே!**

22.10.1873ல் வள்ளலார் சொன்னது யாதெனில்: "உண்மை சொல்ல வந்தனனே என்று உண்மை சொல்ல புகுந்தாலும் தெரிந்து கொள்வாரில்லை"

**அன்பர்களே!**

வள்ளலார் சொன்ன அந்த உண்மையை எவர் ஒருவர் தெரிந்து, அறிந்து, அனுபவம் பெறுகிறார்களோ அவர்கள், அவர்கள் மட்டுமே வள்ளலார் பெற்ற பெருவாழ்வை பெறுவார்கள். உண்மை ஆண்டவரையும், நம் வள்ளலாரையும், கண்டிப்பாக கண்டு களிக்கலாம்.

**ஆக,** வள்ளலார் கண்ட "தனி நெறி" என்ன? என நாம் தெரிந்து கொண்டே ஆக வேண்டும். தனிநெறி குறித்து நான் இங்கு வாசிப்பதை உற்று நோக்க வேண்டுகிறேன்.

**அன்பர்களே!**

வள்ளலாரை காண ஆசை கொள்பவர்கள், ஆண்டவரின் அருளுக்கு ஆசைப்படுவர்கள். சற்று நிமிர்ந்து உட்காருங்கள். இதோ ஒரு தடவை மகா மந்திரத்தை சொல்வோம்.

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**

**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

**அன்பானவர்களே!**

அன்பு, இரக்கம், ஒழுக்கம், இவைகளின் உண்மை குறித்து ஏற்கனவே, அதாவது, வள்ளலாருக்கு முன்பே ஞானிகளால், சமய சான்றோர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**“அன்பே சிவம்” - என்கிறார் திருமூலர்**

அன்பே கடவுள். ஆண்டவரிடத்தில் அன்பு தான் நிறைந்துள்ளது என்கிறார் திருமூலர். ஆக, அன்பு ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது

**அடுத்து “இரக்கம்”**

மகாவீர நெறியில் “கருணை” அடிப்படை கொள்கையாகவே உள்ளது.

சுவாசிக்கும் போது, பேசும் போது சிற்றுயிர்கள் உள்ளே சென்று இறந்துவிடக்கூடாது என்று மூக்கு மற்றும் வாயை அம்மார்க்கத்தார்கள் துணியால் மூடியிருப்பார்கள்.

நடக்கும்போது சிறு உயிர்கள் மிதிப்பட்டு இறந்துவிடக்கூடாது என்று பூ பெருக்குமாறால் பெருக்கிக் கொண்டே நடப்பார்கள். ஆக உண்மை இரக்கமும் கருணையும் இம்மார்க்கத்தில் காண முடிகிறது.

**அடுத்து,**

**“ஒழுக்கம்”**

நம் தெய்வப்புலவர் வள்ளுவர் அய்யாவின் குறள்;

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்.

உயிர் இல்லைன்னா நாம் ஏது? இவ்வுடம்பில் அந்த உயிர்க்கு நிகராக “ஒழுக்கத்தை” சொல்கிறார் வள்ளுவர் அய்யா.

ஆக, அன்பு, இரக்கம், கருணை, ஒழுக்கம், ஏற்கனவே அதாவது வள்ளலாருக்கு முன்பே வெளிப்பட்ட நிலையில்

வள்ளற் பெருமான் புதியதாக எதைச் சொன்னார்கள்?

தெரிந்து கொள்ள வேண்டுமா, வேண்டாமா?

நம்மிடம் மற்றவர்கள் கேட்பார்களா? கேட்கமாட்டார்களா?

**அடுத்து,**

"கடவுள் பக்தி"

எல்லா சமய மத மார்க்கங்களிலும் கடவுள் குறித்து மற்றும் அக்கடவுள் அருள் பெறுவதற்குரிய வழியை தான் காட்டுகின்றன. கடவுளுக்காக கோயில்கள் உள்ளது. வழிபாடு முறைகள் உள்ளன.

இந்நிலையில், வள்ளற்பெருமான் தனியாக என்னச் சொன்னார்கள்.? புதியதாக எதை வெளிப்படுத்தி உள்ளார்கள்?

**அன்பர்களே!**

மிக முக்கிய பகுதிக்கு வந்து விட்டோம். ஆம், வள்ளற்பெருமான் வெளிப்படுத்திய நெறி, ஒரு தனி நெறி

அதுவும் "உண்மை பொது நெறி"

அதுவே "சுத்த சன்மார்க்கம்" ஆகும்.

இந்த சுத்த சன்மார்க்கத்தில் உலகிற்கு எதை தனியாக புதியதாக வெளிப்படுத்தியுள்ளார் தெரியுமா?

(ஒன்று), உண்மை கடவுளை வெளிப்படுத்துகிறார் நம் வள்ளலார். (இரண்டு), ஒரு புதிய வழியை காட்டுகிறார் நம் வள்ளலார். (மூன்று), பெரும் பயனை பெற வைக்கிறார் நம் வள்ளலார்.

**அன்பர்களே!**

வள்ளலார் சொல்கிறார்கள்; "சுத்த சன்மார்க்கத்தில், தான் கண்டு வெளிப்படுத்தும் கடவுள், உலகில் காணும் சமய மத

மார்க்கங்களில் சொல்லப்பட்டுள்ள கடவுளோ, தேவர்களோ, மூர்த்திகளோ, இவர்களில் ஒருவரல்ல’’ என்கிறார்கள்.

சுத்த சன்மார்க்கத்தில் காணும் கடவுள், உண்மை கடவுள், புதிய கடவுள்.

அது “சுத்த சிவம்”. அதாவது தனித்தலைமைப் பெரும்பதியாகிய “பெருங்கருணைக் கடவுள்” என்கிறார்கள்.

வள்ளலார் மார்க்கத்தின் கடவுள் ‘‘பெருங்கருணை’’ என அறிவோம்.

மார்க்கம் என்றால் வழி.

வள்ளலார் தான் கண்ட உண்மை பொது வழிக்கு சுத்த சன்மார்க்கம் எனப் பெயரிடுகிறார்கள்.

இந்த வழியும், வழிபாட்டு முறையும் புதியதாகவே உள்ளது.

ஆம், இங்கு “கருணை” ஒன்றே சாதனம் எல்லா சமய மத மார்க்கங்களிலும் இறையருள் பெறுவதற்கு கருணை வேண்டும் என்கிறது.

**ஆனால்,**

“கருணை” மட்டுமே சாதனம் என்கிறார் நம் வள்ளலார். மேலும் அந்த கருணை விருத்திக்கு தடையாக இருக்கும் சாதி, சமய, கட்டுப்பாடு ஆச்சாரங்களை விட்டு ஒழிக்க வேண்டும் என்கிறார்கள்.

இந்த கட்டுப்பாடு ஆச்சாரங்களை ஒழிக்காமல், கடவுள் அருள் பெறவே முடியாது என்பதே வள்ளலார் கண்ட உண்மை.

அப்படி என்றால் இங்கு எந்தொரு ஆசாரமும் இல்லையா என்றால் ஒரே ஒரு ஆசாரம் உள்ளது. அது சத்திய ஞான ஆச்சாரமாகிய ‘‘பொது நோக்கமே’’.

**அன்பர்களே!**

கருணை என்றால் என்ன எனப் பார்க்கும் போது வள்ளலார் சொல்கிறார்கள்.

கருணை என்பது;

''எல்லா உயிர்களிடத்தும் தயவும், ஆண்டவரிடத்தில் அன்புமே''

அன்பர்களே! இது நாள் வரை நம்மிடம் வெளிப்பட்டுள்ள தயவின் அளவு என்னத் தெரியுமா?

''மனிதர், மனிதர்களிடத்தில் தயவு கொள்ளுதல் மட்டுமே நம்மிடம் வெளிபட்டுள்ளது. அதுவும் முழுமையாக வெளிப்பட வில்லை''

- இன்றும் போர்கள் நடைபெற்றுக்கொண்டுதான் உள்ளது.
- கொலைகள், களவுகள், நடைபெறுகிறது. நாம் தேவயோனி அல்லது நரகயோனி பிறவிலேயே உள்ளோம்.

மனிதப் பிறவியில் தான் "சாகா கல்வி" கைக்கூடும் என்கிறார் வள்ளலார்.

நாம் மனிதர்களா? என்ற கேள்விக்கு பதில் அவரவர் அறிவிடத்திலேயே உள்ளது. அப்படிதானே நான் சொல்லமுடியும்.

**அன்பர்களே!**

எல்லா உயிர்களிடத்தும் தயவும், ஆண்டவரிடத்தில் அன்புமே கருணையாகும்.

இதில் இரண்டாவது சத்திய வாக்கு "ஆண்வரிடத்தில் அன்பு"
இந்த சத்திய வாக்கியத்தின் அர்த்தத்தை சாதரணமாக பார்க்க முடியவில்லை.

அன்பு என்பதற்கு ஒரு விளக்கம் காண்போம்.

"ஒரு இடத்தில் கூட்டமாக உள்ளது. அதை பார்த்த நான், பக்கத்திலிருந்தவரிடம் என்ன என்று கேட்கிறேன். அதற்கு அவர், 'ஒரு பெண் ரோடை கிராஸ் பண்ணும்போது ஒரு கார் அவள் மீது மோதி விட்டது. மயக்க நிலையில் உள்ளாள். காலில் அடிபட்டுள்ளது. 108 அம்புலன்ஸ்க்கு போன் பண்ணியுள்ளார்கள் என்கிறார்.

அதற்கு நான், 'அய்யோ பாவம் இங்கு அடிக்கடி விபத்து (Accident) ஆகிறது. வேகத்தடை போட மாட்டேங்கிறாங்க என்ன செய்யறது' என்று கூறி சென்று விட்டேன்.

ஆனால்,

அதே நேரத்தில் அடிப்பட்டவர் எனக்கு அறிமுகமானவராக இருக்கும்போது, மேற்படியாக நான் சொல்லி அங்கிருந்து சென்று விடுவேனோ? கேட்டவுடன் எனது அன்பு வெளிப்படுகிறது. அவள் இருக்குமிடம் நோக்கி விரைந்து விடுவேன்.

**ஆக,**

அறிந்தவர்களாக இருந்தால் நம் அறிவில் அன்பு மிகுதியாகுகிறது. ஆண்டவர் யார்? என அறிந்திருந்தால் மட்டுமே அவரிடம் அன்பு வரும்.

அன்பர்களே! நம்மை எந்த கடவுளை வணங்கச் சொல்கிறார் வள்ளலார் தெரியுமா?

வள்ளலார் கைப்பட எழுதிய சமரச சுத்த சன்மார்க் சத்திய சிறு விண்ணப்பத்தில் இருப்பதை வாசிக்கின்றேன். கேளுங்கள்;

''ஓர் உண்மைக் கடவுள் உண்டெண்றும், அக்கடவுளை உண்மை அன்பால் கருத்தில் கருதி வழிபாடு செய்தல் வேண்டும்.'' என்கிறார்கள்.

இங்ஙனம் வழிபாடு செய்தால், கடவுளின் நிலை அவரவர் கருத்தின்கண் வெளிப்பட்டு விளங்குமென்கிறார் வள்ளற்பெருமான்.

சுத்த சன்மார்க்கத்தில் ''அக அனுபவமே உண்மை" என்கிறார்.

**அடுத்து;** பெரிய பயனாகிய ''மரணமில்லா பெருவாழ்வு'' ஆகும்

என் மார்க்கம் இறப்பையொழிக்கும் மார்க்கம் என் மார்க்கத்தில் ''சாகாகல்வி''யை தவிர வேறு ஒன்றுமில்லை என்கிறார் வள்ளலார்

சாகாதவனே சுத்த சன்மார்க்கி என்கிறார் வள்ளலார்.

**அன்பர்களே!**

இதுவரை உலகில் வெளிப்பட்டிருந்த சமய, மத, மார்க்கங்களில் இந்த பயன் சொல்லப்படவில்லை. காரணம் அவையில் சொர்க்கம், நரகம் பற்றி உள்ளது. மரணம் நிச்சயம் என்கிறது.

சொர்க்க, நரகம் பற்றி இங்கு விசாரமில்லை என்கிறார் வள்ளலார்.

வள்ளலாக்கு முன்பிருந்த ஞானிகள் சமாதி, முக்தி என்றளவிலேயே பயன் பெற்றுள்ளார்கள். பிறவி அறுக்கவே ஆசைக் கொண்டார்கள்.

அவர்கள் கொண்ட முயற்சியின்பயன், அவர்களுக்கு நீண்ட ஆயுளை கொடுத்தது அவ்வளவு தான்.

வள்ளலார் சொல்கிறார்கள்,

''எல்லாரும் செத்து அல்லவா ஒழிந்துவிட்டார்கள்.''

கடவுள் அருளால் சாகாமலிருக்கும் வழியை அவர்கள் காணவில்லையே என்கிறார் வள்ளலார்.

சுத்த சன்மார்க்க நெறியால், நான் மரணத்தை தவிர்த்துக்கொண்டேன் என்கிறார் வள்ளலார். இறைவன் இப்பயனை கொடுக்க, வள்ளலார் பெற்றார்கள்.

அந்த பயனை நாம் எல்லோருமே பெறக்கூடியதாக உள்ளது என்ற உண்மையை தான் வள்ளலார் சொல்கிறார்கள்.

இது சுத்த சன்மார்க்க நெறியில் மட்டுமே கிடைப்பதாக உள்ளது. மற்ற நெறியில் பெறுவதாக இல்லை. சமயம், மதங்களில் பயணித்து இப்பயனை பெற காலம் காணாது என்கிறார் நம் வள்ளற்பெருமான்.

இப்பிறவிலேயே, கடவுளின் நிலைக்கண்டு, அருள்பெற்று, மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம், முதலிய அவத்தைகளை நீக்கி பேரின்ப பெருவாழ்வில் வாழ வழி கண்டவர் நம் வள்ளல்பெருமான்.

**இங்ஙனமாக,**

வள்ளலாரின் சுத்த சன்மார்க்க நெறி தனிநெறியாக விளங்குகிறது.

உண்மை கடவுளாக பெருங்கருணை கடவுளும், புதிய வழியாக சுத்த சன்மார்க்கமும், பெரும் பயனாக மரணமில்லா பெருவாழ்வும் கிடைக்கிறது.

**அன்பர்களே!**

உலகில் காணும் எந்தவொரு சமய, மத, மார்க்கங்களின் கிளையாக சுத்த சன்மார்க்கம் விளங்கவில்லை. வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம். சைவம், வைணவம், கிறிஸ்தவம், இஸ்லாம், ஜைனம், புத்தம், சீக்கியம், உட்பட அனைத்தும் எப்படி தனித் தனியாக, தனிக்கொள்கையுடையதாக, விளங்குகிறதோ, அதே போல் தான் சுத்த சன்மார்க்கமும் ஒரு தனி நெறியாக விளங்குகிறது. அதே நேரத்தில் எல்லா சமய, மத, மார்க்கங்களுக்கும், உண்மை பொது நெறியாகவும் விளங்குகிறது. இதுவே சுத்த சன்மார்க்த்தின் சிறப்பு. அதுவே இயற்கையின் உண்மை, விளக்கம் இன்பம் ஆகும்

இந்த சுத்தசன்மார்க்கத்தின் மரபுகள் நான்கும் ஆண்டவராலேயே வள்ளலாருக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது

**அன்பர்களே!**

நாம் வள்ளற்பெருமானை விட பாக்கியம் செய்தவர்கள் ஆண்டவரை காணும் உண்மை வழியை கண்டு பிடிக்க வள்ளலாருக்கு பல வருடங்கள் ஆனது.

அவரின் பயணம் சமயம், வேதாந்தம், சிந்தாந்தம் உள்பட அனைத்திலும் பயணித்து சென்றது. முடிவாக உண்மையான வழியை கண்டு உலகிற்கு நமக்கு வெளிப்படுத்தினார்கள்.

வள்ளற்பெருமான்போல் சமயம், மதம், வேதாந்தம், சித்தாந்தம், மற்றும் எந்தவொரு சாத்திரம், ஆகமம், ஆச்சாரங்களின் வழிச்சென்று நாம் கடக்க வேண்டாம். நேரிடையாகவே சுத்த சன்மார்க்கவழியில் பயணித்து, இப்பிறவிலேயே விரைந்து சென்று, உண்மை கடவுளின் அருள் பெறலாம்.

இப்பொழுது சொல்லுங்கள்

வள்ளற்பெருமானை விட நாம் பாக்கியசாலிகள் தானே.

இது ஆண்டவரின் கருணைச் செயலே உண்மை வழியை நமக்குக் காட்டிய வள்ளல்பெருமானின் இரக்கத்திற்கு வந்தனம்! வந்தனம்!! வந்தனம்!!!

**அன்பர்களே!**

**முடிவாக,**

சில முக்கிய வேண்டுகோள்களை வைத்து எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

- ♦ திருவருட்பிரகாச வள்ளற்பெருமானை அவர்தம் முடிவான சுத்த சன்மார்க்க கொள்கையிலேயே வெளிப்படுத்துங்கள்.
- ♦ வள்ளலாரின் கட்டளைப்படி, அவரால் கைவிடப்பட்ட சமய ஸ்தோத்திரப் பாடல்களில் லட்சியம் வையாதீர்கள்.

♦ எவர் ஒருவர் சுத்த சன்மார்க்கத்தின் நான்கு மரபுகளை ஏற்று, வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்க விண்ணப்பங்களின் படி, விண்ணப்பம் செய்பவர்களுக்கு, பெருங்கருணை ஆண்டவரின் நிலை காணும் பாக்கியமும், வள்ளலார் பெற்ற தனி வடிவமும் பெறுவர் இது சத்தியம். இது சத்தியம்.

**ஆக,**

♦ சுத்த சன்மார்க்த்தில் பயிற்சி என்னவென்று பார்க்கும்போது, அது, "எல்லா உயிர்களையும் தம் உயிர் போல் பாவிக்கின்ற உணர்வை ஏற்படுத்துதல் மற்றும் உண்மை கடவுளின் நிலையறிதல் ஆகும்."

♦ இந்த பயிற்சியை மேற்க்கொள்பவர்கள் சாதி, சமயத்தில் முற்றும் பற்றற கைவிடப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

♦ ஒழுக்கம் நிரப்பி கொள்ள வேண்டும்.

♦ சாஸ்திரப்படியான ஆச்சாரம் மற்றும் உலக ஆச்சாரங்களை விட்டு ஒழிக்க வேண்டும்.

♦ இடைவிடாது நன்முயற்சி மற்றும் நல்ல விசாரணை செய்தல் வேண்டும்.

♦ நினைந்து, உணர்ந்து, நெகிழ்ந்து, அன்பால் நம்மிடம் கண்ணீர் ஊற்றெழ வேண்டும்.

இதுவே வள்ளலார் கண்ட வழி மற்றும் மார்க்க வழிபாடு ஆகும்.

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

வள்ளலாரின் தனிநெறியை கடைப்பிடிப்போம் விரைந்து உண்மை கடவுள் அருள்பெற்று மரணத்தை தவிர்ப்போம்

வள்ளலார் கட்டளைப்படி "நினைந்து" எனத் தொடங்கும் 28 பாசுரப்பாடலில் கண்ட படி பயிற்சி செய்வோம்.

**நன்றி**

**உங்கள் சகோதரி : இராமலெட்சுமி (ஏபிஜெ. அருள்)**

# நிர்வாகம் கவனிக்குமா?



கடந்த வடலூர் திருஅருட்பிரகாச வள்ளலார் நிலையத்தின் தைப்பூச பெருவிழாவின் ஏற்பாடுகளை நிலைய நிர்வாகிகள் சிறப்பான முறையில் நடத்தி காட்டினார்கள்.

கடந்த ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மற்றும் சில வள்ளலாரின் முடிபான கொள்கைக்கு முரண்பாடான செயல்களை தடுத்து, சிறப்பான வழியில் தைப்பூச பெருவிழா நடைப்பெற்று வருகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

இந்த வருட விழாவில் சுத்த சன்மார்க்கத்தின் கொள்கையை விளக்கும் போர்டுகள் (டிஜிட்டலிலும்) நிறைய வைக்கப்பட்டிருந்தன.

கடைகள் அனைத்தும் ஒரே இடத்தில் வருமாறு அமைக்கப்பட்டிருந்தது. வாகனங்கள் மற்றும் வந்த லட்சக்கணக்கான மக்களை ஒழுங்குபடுத்துவதில் காவல்துறையின் பங்கு சிறப்பாக இருந்தது பாராட்டுக்குரியது.



ஆனால் சில குறைபாடுகளும் தென்பட்டன. அவை; தனியார்கள் வழங்கிவந்த அன்னதானத் திற்கு பெருவெளி மைதானத்தில்

இடம் ஒதுக்கப்படவில்லை. அதனால் நிலையத்தில் வழங்கிய அன்னதானத்திற்கு கூட்டம் அதிகமாகியது. வரும் லட்சக்கணக்கான கூட்டங்களுக்கு நிலையத்தில் வழங்கப்படும் அன்னதானம் போதுமான நேரத்தில் மற்றும் இடவசதி காணாது என்பதே உண்மை. எனவே விருப்பம் கொள்ளும் தனியார்கள் முன் அனுமதியுடன் குறிப்பிட்ட இடத்தில் வழங்க அனுமதிக்க வேண்டும்.

மேலும், வள்ளலாரின் கொள்கைக்கு மாறான செயல்களில் ஒன்று "சூடம் ஏற்றுதல்" சூடம், நெய்விளக்குகள் ஏற்றவோ விற்கவோ தடைவிதிக்கப்பட்டுள்ளது என நிலையம் நிர்வாகி சார்பில் அறிவிப்பு பலகை வைக்கப்பட்டிருந்தது. அதை அடுத்தே, பல கடைகளில் சூடம், நெய் விளக்குகள் விற்கப்பட்டன.

பல இடங்களில் சத்திய தருமசாலை, சத்தியஞானசபை முன்பாக சூடன்கள் கொளுத்த அனுமதிக்கப்பட்டது. கொழுத்தப்பட்ட இடங்களிலிருந்து கிளம்பிய "கரும்புகை"கள் பலரை முகம் சுழிக்கவே வைத்தது. அதை தடுக்க எந்தொரு நடவடிக்கையும் எடுக்காதது ஏனோ?

பாலித்தினால் சுற்றப்பட்டிருந்த சூடன்கள் அப்படியே தீயில் போடப்பட்டது அதிர்ச்சியை தந்தது. கரும்புகையால் குழந்தைகள் பெரியோர்கள் பலர் இறுமி சென்றது பார்க்க வேதனையாக இருந்தது.

இதை உடனே நிலைய நிர்வாகிகளின் கவனத்திற்கு எடுத்துச் சென்ற நம்மிடம் அங்கிருந்த ஒரு நிலைய அலுவலர் கூறியது;

"சார் சூடம், விளக்குகள் விற்கவோ ஏற்றவோ கூடாது என்று போர்டு வைத்துள்ளோம். அதை மீறி செய்கிறார்கள் என்றார்.

நாம் அவரிடம் போர்டு வைத்தால் மட்டும் போதாது தடுக்க வேண்டியதும், சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரமும் உங்களிடம்தான் உள்ளது என்றோம்.

நிலைய அதிகாரி பணியில் வெளியே உள்ளார். இதுபற்றி தெரிவித்து உரிய நடவடிக்கை இனி வரும் காலத்தில் எடுக்கிறோம் என்றார் நம்மிடம்.

வரும் காலங்களில் இன்னும் சிறப்பாக முழுமையான முறையில் விழா நடைபெற வேண்டும் என்ற வேண்டுகோளை அவரிடம் தெரிவித்து அங்கிருந்து கிளம்பினோம். - பாலாஜி

## இதுவே சுத்த சன்மார்க்கம்

ஏபிஜெ. அருள்

திருஅருட்பிரகாச வள்ளலார் தான் கண்ட மார்க்கத்திற்கு (மார்க்கம் என்பது வழி) ‘‘சுத்த சன்மார்க்கம்’’ என்றும், சங்கத்திற்கு சமரச சுத்த சன்மார்க்க சத்தியச் சங்கம் என்றும், சாலைக்கு சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச் சாலை என்றும், ஞான சபைக்கு சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான சபை என்றும், திருப்பெயரிடுகிறார்கள்.

வள்ளலார் பெற்றிருந்த சுத்த சன்மார்க்கத்தின் மரபு நான்கு ஆகும்.

1. சாகாத கல்வியே கல்வி
2. ஒன்றே சிவம்
   தான்என அறிந்தஅறிவே
   தகும்அறிவு
3. மலம்ஐந்தும் வென்றவல் லபமே
   தனித்தபூ ரணவல்லபம்
4. வேகாத காலாதி கண்டுகொண் டெப்பொருளும்
   விளையவிளை வித்ததொழிலே
   மெய்த்தொழில தாகும்.

**1369 : -நடராஜபதி மாலை**

28. சாகாத கல்வியே கல்விஒன் றேசிவம்
தான்என அறிந்தஅறிவே
தகும்அறிவு மலம்ஐந்தும் வென்றவல் லபமே
தனித்தபூ ரணவல்லபம்
வேகாத காலாதி கண்டுகொண் டெப்பொருளும்
விளையவிளை வித்ததொழிலே
மெய்த்தொழில தாகும்இந் நான்கையும் ஒருங்கே
வியந்தடைந் துலகம்எல்லாம்
மாகாத லுறஎலாம் வல்லசித் தாகிநிறை
வானவர மேஇன்பமாம்
மன்னும்இது நீபெற்ற சுத்தசன் மார்க்கத்தின்
மரபென் றுரைத்தகுருவே
தேகாதி மூன்றும்நான் தருமுன்அருள் செய்தெனைத்
தேற்றிஅருள் செய்தசிவமே
சிற்சபையின் நடுநின்ற ஒன்றான கடவுளே
தெய்வநட ராஜபதியே.

தான் வைத்திருந்த சமய லட்சியத்தினை கைவிட்டு விட்டு எல்லா சமயங்களுக்கும் எல்லா மதங்களுக்கும் எல்லா மார்க்கங்களுக்கும் “உண்மைப் பொது நெறியாக” விளங்கும் ஒரு புதிய உண்மை பொது வழியை (சன்மார்க்கத்தை) கண்டு வெளிப்படுத்துகிறார்கள்.

**363 : ஆன்ம தரிசனம்**

7. சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன்
சாத்திரக் குப்பையும் தணந்தேன்
நீதியும் நிலையும் சத்தியப் பொருளும்

நித்திய வாழ்க்கையும் சுகமும்
ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா
அருட்பெருஞ் சோதிஎன் றறிந்தேன்
ஓதிய அனைத்தும் நீஅறிந் ததுநான்
உரைப்பதென் அடிக்கடி உனக்கே.

### 736 : அச்சோப் பத்து

10. சாதியைநீள் சமயத்தை மதத்தைஎலாம்
விடுவித்தென் தன்னை ஞான
நீதியிலே சுத்தசிவ சன்மார்க்க
நிலைதனிலே நிறுத்தி னானைப்
பாதியைஒன் றானவனைப் பரம்பரனைப்
பராபரனைப் பதிஅ னாதி
ஆதியைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்சோ
தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ.

### 049. இறைவனை ஏத்தும் இன்பம்

8. தத்துவம் அனைத்தும் தவிர்த்துநான் தனித்த
தருணத்தில் கிடைத்ததொன் றென்கோ
சத்துவ நிரம்பும் சுத்தசன் மார்க்கந்
தனில்உறும் அனுபவம் என்கோ
ஒத்துவந் தெனைத்தான் கலந்துகொண் டெனக்குள்
ஓங்கிய ஒருமையே என்கோ
சித்துவந் தாடுஞ் சித்தனே என்கோ
திருச்சிற்றம் பலத்தவ நினையே.
"சுத்த சன்மார்க்கம்" என்பது ......

### 098. சற்குருமணி மாலை

12. பன்னெறிச் சமயங்கள் மதங்கள்என் றிடும்ஓர்
பவநெறி இதுவரை பரவிய திதனால்

செந்நெறி அறிந்திலர் இறந்திறந் துலகோர்
செறிஇருள் அடைந்தனர் ஆதலின் இனிநீ
புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி எனும்வான்
புத்தமு தருள்கின்ற சுத்தசன் மார்க்கத்
தன்னெறி செலுத்துக என்றஎன் அரசே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே.

### 109. உலகப்பேறு

5. முன்னுள மார்க்கங்கள் யாவும் முடிந்தன
மன்னுள சுத்தசன் மார்க்கம் சிறந்தது
பன்னுளந் தெளிந்தன பதிநடம் ஓங்கின
என்னுளத் தருட்பெருஞ் சோதியார் எய்தவே.

### 113. அம்பலவாணர் வருகை

69. எச்சம யங்களும் பொய்ச்சம யமென்றீர்
இச்சம யம்இங்கு வாரீர்
மெய்ச்சம யந்தந்தீர் வாரீர். வாரீர்

### 110. தனித் திருஅலங்கல்

158. ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா
அருட்பெருஞ் சோதிஎன் உளத்தே
நீதியில் கலந்து நிறைந்தது நானும்
நித்தியன் ஆயினேன் உலகீர்
சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே
சத்தியச் சுத்தசன் மார்க்க
வீதியில் உமைத்தான் நிறுவுவல் உண்மை
விளம்பினேன் வம்மினோ விரைந்தே
வள்ளலார் கண்ட கடவுள்:

தான் கண்ட உண்மை கடவுளை தனி சிவம் ∴ சுத்த சிவம்∵.பெருங்கருணை எனக்குறிப்பிட்டுஅழைக்கிறார் வள்ளலார்.

**தனித்தலைமைப் பெரும்பதி:**

கடவுளின் பெயர்: பெருங்கருணை .

மேலும் இயற்றிய திருஅகவலில் உண்மை கடவுள் குறித்த விளக்கம் மற்றும் இன்பத்தை முழுமையாக வெளிப்படுத்தியிருப்பார்கள். அந்த திருஅகவலில் பெருங்கருணை என்ற திருவார்த்தை இல்லை.

காரணம், சொல்லப்பட்ட உண்மை, விளக்கம். இன்பத்தின் முழுப்பெயரே "பெருங்கருணை" ஆகும்.

**107. ஞானசரியை (வாய்பறை ஆர்த்தல்)**

12. திருநெறிஒன் றேஅதுதான் சமரசசன் மார்க்கச்
சிவநெறிஎன் றுணர்ந்துலகீர் சேர்ந்திடுமின் ஈண்டு
வருநெறியில் எனையாட்கொண் டருளமுதம் அளித்து
வல்லபசத் திகளெல்லாம் வழங்கியஓர் வள்ளல்
பெருநெறியில் சித்தாடத் திருவுளங்கொண் டருளிப்
பெருங்கருணை வடிவினொடு வருதருணம் இதுவே
கருநெறிவீழ்ந் துழலாதீர் கலக்கமடை யாதீர்
கண்மையினால் கருத்தொருமித் துண்மைஉரைத்தேனே.

**105. புனித குலம் பெறுமாறு புகலல்**

1. சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர்அவர் தாமே
வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய

மேவுகின்ற தருணம்இது கூவுகின்றேன் உமையே.

5. எய்வகைசார் மதங்களிலே பொய்வகைச்சாத் திரங்கள்
எடுத்துரைத்தே எமதுதெய்வம் எமதுதெய்வம் என்று
கைவகையே கதறுகின்றீர் தெய்வம்ஒன்றென் றறியீர்
கரிபிடித்துக் கலகமிட்ட பெரியரினும் பெரியீர்
ஐவகைய பூதவுடம் பழிந்திடில்என் புரிவீர்
அழியுடம்பை அழியாமை ஆக்கும்வகை அறியீர்
உய்வகைஎன் தனித்தந்தை வருகின்ற தருணம்
உற்றதிவண் உற்றிடுவீர் பெற்றிடுவீர் உவப்பே.

## 106. சுத்த சிவநிலை

22. சாதிகுலம் என்றும் சமயமதம் என்றுமுப
நீதிஇயல் ஆச்சிரம நீட்டென்றும் - ஓதுகின்ற
பேயாட்ட மெல்லாம் பிதிர்ந்தொழிந்த வேபிறர்தம்
வாயாட்டம் தீர்ந்தனவே மற்று.

## 037. அருள்விளக்க மாலை

85. நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்றகலைச் சரிதம்எலாம் பிள்ளைவிளை யாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார் இலைநீ
விழித்திதுபார் என்றெனக்கு விளம்பியசற் குருவே
கால்வருணங் கலையாதே வீணில்அலை யாதே
காண்பனஎல் லாம்எனக்குக் காட்டியமெய்ப் பொருளே
மால்வருணங் கடந்தவரை மேல்வருணத் தேற்ற
வயங்குநடத் தரசேஎன் மாலைஅணிந் தருளே.

## 121. இது நல்ல தருணம்

3. மதித்த சமயமத வழக்கெல்லா மாய்ந்தது
வருணாச் சிரமம்எனு மயக்கமும் சாய்ந்தது

கொதித்த லோகாசாரக் கொதிப்பெல்லாம் ஒழிந்தது
கொலையும் களவுமற்றைப் புலையும் அழிந்தது. இதுநல்ல

### 116. ஆடேடி பந்து

5. சதுமறை ஆகம சாத்திரம் எல்லாம்
சந்தைப் படிப்புநம் சொந்தப் படிப்போ
விதுநெறி சுத்தசன் மார்க்கத்தில் சாகா
வித்தையைக் கற்றனன் உத்தரம் எனுமோர்
பொதுவளர் திசைநோக்கி வந்தனன் என்றும்
பொன்றாமை வேண்டிடில் என்தோழி நீதான்
அதுஇது என்னாமல் ஆடேடி பந்து
அருட்பெருஞ் சோதிகண் டாடேடி பந்து. ஆடேடி

### 106. சுத்த சிவநிலை

30. வேதாக மங்களென்று வீண்வாதம் ஆடுகின்றீர்
வேதாக மத்தின் விளைவறியீர் - சூதாகச்
சொன்னவலால்உண்மைவெளி தோன்ற உரைக்கவிலை
என்ன பயனோ இவை.

ஆக, மிக முக்கியமாக கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய உண்மை எதுவெனில்; சுத்த சன்மார்க்கத்தின் ஒரே சாதனமாகிய "கருணை" நம்மிடம் விருத்தியாகாமல் தடை செய்கின்ற ஆசாரங்களை விட்டொழிக்க வேண்டும். இந்த கட்டுப்பாட்டு ஆசார ங்களின் பிறப்பிடமே சமயங்கள், மதங்கள் எனக் கண்ட வள்ளலார் எல்லா சமய, மத .மார்க்க ங்களையும், தன் மார்க்கத்திற்கு எக்காலத்திற்க்கும் முக்கியத் தடையாக அறிவிக்கிறார்கள். சாதி சமய மத மார்க்கங்களை சாராமல் இருந்தாலும் அவையின் ஆசாரங்கள் வாழ்வில் நடைமுறையில் ஒட்டிக் கொண்டே வருவதால் தான் அவையில் மனம்

பற்றக்கூடாது என்றும் அவைகளை விட்டொழிக்க வேண்டும் என்றும் மிகத்தெளிவாகவே வள்ளலார் குறிப்பிடுகிறார்கள்.

**சாகா கல்வி:**

சுத்த சன்மார்க்கத்தின் முதல் மரபு: சாகாத கல்வியே கல்வி. இந்த கல்வி யாரால் பயிற்றிவிக்கப் படுகிறது?

பாடல் எண்: 1848 "சாகாக் கல்வி எனக்குப் பயிற்றித் தந்த ஜோதியே."

சுத்த சன்மார்க்கத்தின் மரபாகிய சாகா கல்வி பயிலுவதற்கு முதலில் ஆண்டவரின் அருள் பெறுதல் வேண்டும்.

அதற்கு ஆண்டவர் யார் என்று தெரிதல் வேண்டும்.

அதற்கு ஆண்டவரின் நிலையறிதல் வேண்டும். அதற்கு ஒழுக்கம் நிரப்புதல் வேண்டும். இங்கு ஒழுக்கம் என்பது; சுத்த சன்மார்க்க ஒழுக்கம் ஆகும். அது என்ன என்பதை வள்ளலாரே கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்கள். வள்ளலார் முதலில் தனக்கு காட்டப்பட்ட சமயத்தில் பற்று வைக்கிறார்கள். சமய மதங்களில் வெளிப்படுத்தப்பட்ட அனைத்தையும் கற்று அறிகிறார்கள். அனுபவித்து பல சமய ஸ்தோத்திரப் பாடல்கள் பாடினாலும், அதன் கட்டுப்பாட்டு ஆசாரங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. உண்மை கடவுளின் நிலைக்குறித்தே சிந்தனை செய்கிறார்கள். நல்ல விசாரணையை தொடர்ந்து செய்து வருகிறார்கள். கருணை ஒன்றையே சாதனமாக கொண்டு வந்தார்கள். தன் முன் சான்றோர்கள் துன்பம், பயம், மூப்பு, பிணி போன்ற அவத்தைகளை நீக்கிக் கொண்டு வாழ்ந்திருந்தாலும் இறுதியில் மரணத்தையே தழுவினார்கள். அல்லது சாமாதி ஆனார்கள். இந்நிலையில் வள்ளலாரின் விசாரணை மரணத்தை தவிர்ப்பது எப்படி என்றே இருந்தது. மற்ற ஞானிகளின் வழியில் நில்லாமல் தனி வழியை

கண்டுப்பிடித்தார்கள். அவ்வழியில் உண்மை அன்பு உண்மை அறிவு உண்மை இரக்கம் கொண்டு கடவுளின் நிலைக்கண்டு அருள் பெற்றார்கள். மரணம் தவிர்க்கும் வழியை கண்டார்கள். அவ்வழியே சுத்த சன்மார்க்கம் ஆகும்.

தெளிவாகவே வள்ளலார் அறிவிக்கிறார்கள் என் மார்க்கத்தில் சாகா கல்வியை தவிர வேறு ஒன்றுமில்லை. என் மார்க்கம் இறப்பையொழிக்கும் மார்க்கம். சுத்த சன்மார்க்கத்தில் மட்டுமே சாகா வித்தையை கற்கலாம் (பாடல்: 1984) மரணத்தை தடுத்திடும் ரகசியம் தெரியும் (பாடல்: 1550) மரணமில்லா பெருவாழ்வில் வாழ் ந்திடலாம் (பாடல்: 1530) அவர் கண்ட இந்த உண்மையை இரக்கத்தால் நமக்கு வெளிப்படுத்துகிறார்கள்.

### 105. புனித குலம் பெறுமாறு புகலல்

9. வையகத்தீர் வானகத்தீர் மற்றகத்தீர் நுமது
வாழ்க்கைஎலாம் வாழ்க்கைஎன மதித்துமயங் காதீர்
மையகத்தே உறுமரண வாதனையைத் தவிர்த்த
வாழ்க்கையதே வாழ்க்கைஎன மதித்ததனைப் பெறவே
மெய்அகத்தே விரும்பிஇங்கே வந்திடுமின் எனது
மெய்ப்பொருளாம் தனித்தந்தை இத்தருணந் தனிலே
செய்அகத்தே வளர்ஞான சித்திபுரந் தனிலே
சித்தாடல் புரிகின்றார் திண்ணம் இது தானே.

### 105. புனித குலம் பெறுமாறு புகலல்

7. நரைமரண மூப்பறியா நல்லஉடம் பினரே
நற்குலத்தார் எனஅறியீர் நானிலத்தீர் நீவிர்
வரையில்உயர் குலம்என்றும் தாழ்ந்தகுலம் என்றும்
வகுக்கின்றீர் இருகுலமும் மாண்டிடக்காண் கின்றீர்
புரையுறுநும் குலங்கள்எலாம் புழுக்குலம்என் றறிந்தே

புத்தமுதம் உண்டோங்கும் புனிதகுலம் பெறவே
உரைபெறும்என் தனித்தந்தை வருகின்ற தருணம்
உற்றதிவண் உற்றிடுவீர் உண்மைஉரைத் தேனே.

10. கரணம்மிகக் களிப்புறவே கடல்உலகும் வானும்
கதிபதிஎன் றாளுகின்றீர் அதிபதியீர் நீவிர்
மரணபயம் தவிராதே வாழ்வதில்என் பயனோ
மயங்காதீர் உயங்காதீர் வந்திடுமின் ஈண்டே
திரணமும்ஓர் ஐந்தொழிலைச் செய்யஒளி வழங்கும்
சித்திபுரம் எனஓங்கும் உத்திரசிற் சபையில்
சரணம்எனக் களித்தெனையும் தானாக்க எனது
தனித்தந்தை வருகின்ற தருணம்இது தானே.

.. என்று தெரிந்துக் கொண்டவர்கள் அடுத்து அறிய வேண்டிய மரபு யாதெனில்; “.. பதிவிளக்கம் என்ற தலைப்பில் அமைந்துள்ள 13 பாடல்கள் கடவுள் குறித்து விளக்கத்தை நல்கின்றன. சுத்த சன்மார்க்கம் மூலமாக வள்ளலார் ஓர் புதிய வடிவத்தை பெறுகிறார்கள். இதுவே வள்ளலார் பெற்ற பயன். தான் பெற்றதை
போல் நாம் பெற அழைப்பு விடுக்கிறார் வள்ளலார்.

### 051. பெறாப் பேறு

2. ஆராலும் அறிந்துகொளற் கரியபெரும் பொருளே
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
காராலும் கனலாலும் காற்றாலும் ககனக்
கலையாலும் கதிராலும் கடலாலும் கடல்சூழ்
பாராலும் படையாலும் பிறவாலும் தடுக்கப்
படுதலிலாத் தனிவடிவம் எனக்களித்த பதியே
சீராலும் குணத்தாலும் சிறந்தவர்சேர் ஞான
சித்திபுரத் தமுதேஎன் நித்திரைதீர்ந் ததுவே.

### 110. தனித் திருஅலங்கல்

155. காற்றாலே புவியாலே ககனமத னாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறஇயற்றும் கொடுஞ்செயல்க ளாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்அளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே
ஏற்றாலே இழிவெனநீர் நினையாதீர் உலகீர்
எந்தைஅருட் பெருஞ்ஜோதி இறைவனைச்சார் வீரே.

160. தூக்கமும் துயரும் அச்சமும் இடரும்
தொலைந்தன தொலைந்தன எனைவிட்
டேக்கமும் வினையும் மாயையும் இருளும்
இரிந்தன ஒழிந்தன முழுதும்
ஆக்கமும் அருளும் அறிவும்மெய் அன்பும்
அழிவுறா உடம்பும்மெய் இன்ப
ஊக்கமும் எனையே உற்றன உலகீர்
உண்மைஇவ் வாசகம் உணர்மின்.

இதன் உண்மையறிய வள்ளலாரின்
"28 பாசுரப்பாடல்கள்" துணை நிற்கின்றன. வள்ளலாரின்
சுத்த சன்மார்க்கத்தில் "ஓருமை" என்றச் சொல்
முக்கியமாக உள்ளது. அடுத்து காண்போம்.


- ஏபிஜெ. அருள்

# ஆச்சாரங்கள் ஒழிந்தது.
# சுத்த சன்மார்க்கம் வெளிப்பட்டது

முடிபான நெறியில் மட்டுமே வள்ளலாரை வெளிப்படுத்தி, உண்மைப் பொதுநெறியாம் சுத்த சன்மார்க்கம் உள்ளது உள்ளபடி வெளிப்பட்டு வருகிறது. சமய நெறி கோலத்தில் வெளிப்பட்டு வந்த நெறி பரப்பும் சான்றோர்கள் பலர் இன்று எந்தொரு ஆச்சார அடையாளங்கள் (விபூதி, சமயஉடை, மாலைகள்) இன்றி சுத்தமாக வெளிப்படுகிறார்கள்.

இனி அச்சமில்லை. அவர்கள் வழி தொடர்வோம்.

## சங்கங்களுக்கு அறிவிப்பு



தங்கள் சங்க முகவரியை எங்களுக்கு அனுப்ப வேண்டுகிறோம். இதழ் மொத்தமாக அனுப்பி வைக்க உள்ளோம். கருணை இதழுக்கு தொடர்ந்து ஆதரவு தந்து உதவும்படி வேண்டுகிறோம்.



## THE GREAT SERMON. (பேருபதேசம்)

PERUPADEASAM.

SAINT RAMALINGAM. (Revealed on 22-10-1873)

The Great Advice of preaching of Vallalar.

This was revealed on 22nd October, 1873 (Tamil month of Aipasi 7th day),

Tuesday morning 8a.m. at Mettukkuppam, Siddhivalaaham Thirumaligai,

Cuddalore District.

(Home of perfection where Vallalar attained Immortal body and made his body invisible and mingled with Arutperunjothi Almighty). After unfurling the Suddha Sanmarkam Flag, (one fourth yellow colour at the top, and three fourth white colour at the bottom). This Maha Upadesa (or) Perupadeasam was given to be noted down by the disciples.

All of you living here are advised not to waste the time in vain, as you had been doing now.

Until for some time when it is expected for the outward manifestation of the “Almighty” Arutperunjothi at the Dharma salai at Vadalur, you must be continuously involved in good enquiry and inquiry of the soul and God.

To know how to do the “VICHAARAM” self inquiry, it is:- What is the nature and conditioned state of our-selves and our soul. And all so, what is the nature of self-existing Almighty God who is mastering and ruling us being seated above all of us.

Accordingly, all of you should do “VICHAARAM”, either individually solitarily or collectively, along with amicable friends who are harmonous with or fit to your intelligence or knowledge and disciple, or otherwise, if you can have inquiry with VELAYUTHA MUDALIAR, (His disciple), he will reply upto the maximum standard of a man’s enough understanding.

If we can do this kind of ‘VICHAARAM’, the fore most veil of dark green, which obstructs strongly our soul-knowledge without enlightment will get removed and vanish.

If that first veil vanishes, all other veils will vanish more quickly and automatically. That Green colours the fundamental colour of black.

We should appeal to the "Almighty" ARUTPERUNJOTHI", with continuous thinking and singing with prayer for the removal of the so called Thick veil and also realizing our short comings and faults combined with our needs, even when we are sitting and relaxing by lying down on bed; and also we should make efforts with Devotion, and Divine love so that the real truth will be revealed to us. This "VICHAARAM", is of two kinds;

1. Param, the Supremely higher one which is about "ARUTPERUNJOTHI"

2. Aparam, the lower which is related to The World of the Divine, or Param; where as aparam is related to This World, Aparam.

Between these two, the 'VICHARAM", which is related to this world "IHA – LOHAM": is not the real inquiry (VICHAARAM). Because, if anyone is involved in VICHAARAM, it should not be considered as standard "VICHAARAM" is VI + CHAARAM, Here this "VI" is prefixed to distinguish and deny the ordinary worldly "VICHAARAM"; Truly, CHAARAM means misery, sorrow. So "VI + CHAARAM" means to remove and renounce the misery and sorrow. Moreover, "VICHAARAM" is revealed only to refer to "para-loka-VICHAARAM" the inquiry about the divine world and divine life.

Just as we remove the fungus above the stagnant water of the pond, it is not easy to remove the thick dark green veil of "RAAGA DHUVESA", the "likes" and 'dis-likes" which obstructs the vision of our soul knowledge, without the transcendental heat of "VICHAARAM", 'VICHAARA ATHI-USHNAM". This kind of divine causal heat can be realized by the spiritual experience of an adept yogi.

This Divine heat is not be known to be created or kindled by any other human efforts. Even more than that "VICHAARAM" exceedingly great heat. ATHI – USHNAM can be created by doing melting prayer, praying with devotional songs, and meditating and thinking about the Divine nature, Divine truth and glory. Only for this ATHI – USHNAM, the Yogi, go and live in forests, mountains and

caves, for hundreds and thousands of years and kindle the heat with severe tapas, penance and strict observances and self-control.

Besides doing this kind of TAPAS and creating “ATHI – USHNAM” or heat, it is by singing the Divine glory and greatness with prayerful songs and meditating the Almighty God Arutperunjothi, it is possible to create crores and ten crores (millions and billions) times of “ATHI – USHNAM”.

How to produce that VICHAARA – ATHI – USHNAM ?. It is as follows:

If we can try for one JAAMA or YAAMAM, (three or four hours of duration continuously) involved in Para VICHAARAM (i.e.) Divine inquiry. Without (IHA-VICHAARAM) this worldly enquiry, and also meditating or singing the glory, along with prayer of Devotional songs with melting of the soul and mind, we can attain and achieve whatever we have to attain.

And hence in this world, the worldly people would refer to the VICHAARAM as misery and sorrow without knowing or understanding real truth and meaning of VICHAARAM. But we should not consider that kind of meaning. What they mean is that VICHAARAM itself as misery or sorrow, which is wrong, and also it is not the right meaning, ‘CHAARAM’ means, misery and sorrow (DHUKKAM). But “VICHAARAM” means the removal or destruction of sorrow and misery. And hence VI + CHAARAM = removing or driving away, the misery and sorrow. The prefix, “VI”, which had removed the misery and sorrow, (i.e.) CHAARAM so VICHAARAM refer only to PARA – LOKA – VICHAARAM, inquiry of the Divine World. And so we have to be continuously involved in VICHAARAM. Also VI + CHAARAM means “VI” danger or accident and mishappening, CHAARAM means removal or driving away danger and accident. Conclusively we should be trained and inculcated in good efforts continuously in SATH – VICHAARAM.

Moreover, somebody may ask: Oh ! This is the best occasion or proper – time for the advent of the Almighty “ARUTPERUNJOTHI”.

Why is it necessary to do efforts at this time of the manifestation of God ? Can we attain and achieve whatever we have to achieve ?

Yes. This is good that you asked this; it is really True that the Almighty is to manifest. Also it is True that the veil and obsecuring screen is going to be removed by Him. It is also true that you will achieve or obtain whatever you have to obtain. But the already mentioned green veil or screen which is connected with RAGA DHUVESA, the likes and dislikes, is existing in two parts.

That is as follows:

(1) Asuddha Maya veil, which is related to impure kind of Maya.

(2) Suddha maya veil, which is related to pure kind of maya or illusion. Among these two one part is at the base on the lower portion; another at the top portion. That which is at the lower is the veil of Asuddha Maya. That which is at the top is veil of Suddha Maya. Among these two, Asuddha Maya veil has the aim, and tendency of enjoying this worldly enjoyment “IHA LOKA PHOGA”, But the suddha Maya veil is related to the achievement and perfect realization of paraloka, the Divine world and life.

When the Almighty ARUTPERUNJOTHI manifests, and grants favour by His Omni Grace, he will remove only the Asuddha Maya Veil at the lower part of the ordinary human beings, who had no effort and practice of SATH – VICHAARAM.

Therefore it is possible at that time when that lower veil get removed, we will be blessed with purity to become purified persons, but we can not achieve whatever wish and goal of perfection. Moreover we cannot obtain the Divine favours of performing the penta-divine functions (of creation, production, purification, involution and evolution by grace-blessing), along with other siddhis or (supernatural powers of perfection) and also to practice and gain the spiritual experience, ANMA – ANUPAVA.

Therefore, we will have to do good efforts and get spiritual upliftment. ........... Continues

(Translated by ThiruArul Thirugnana Sambandham, M.A.,M.A.,M.A., Siddhi Valagam, Mettukuppam, INDIA.)